03.02.2026.
S.C.No.49/2021

Crl.M.P.8/2025 மனு நாள் 15.07.2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.1 கோபி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.
A1 absent. 355 BNSS petition filed and allowed. A2 died.
1ம் எதிரி குறுக்கு விசாரணை

நான் டிரைவராக வேலை பார்க்கிறேன். கொடைரோட்டில் உள்ள லாரியில் ஓட்டுநராக பணிபுரிகிறேன். காலை 9 மணிக்கு வேலைக்கு போய்விட்டு மாலை 4 மணிக்கு வந்துவிடுவேன். மேற்படி தகவலை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே 3 கி.,மீ. தொலைவு இருக்கும். வழக்கு சம்பவம் நான்குவழிச்சாலையில் நடந்தது என்றால் சரிதான். வழக்கு சம்பவ காலம் கொரணா காலம், ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலம் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் தனி நபர் வெளியில் செல்லக்கூடாது, அப்படி போனால் போலீசார் வழக்கு போடுவார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். என் அண்ணன் செண்பகராஜன் இருந்த இடத்திற்கும் நான் நின்றிருந்த இடத்திற்கும் இடையே 100 அடிக்குள் இருக்கும். அந்த நான்குவழிச்சாலையில் இரண்டு பக்கத்திற்கும் இடையே அரளி செடிகள் சுமார் 5 அடி உயரத்தில் இருக்கும் என்றால் இல்லை. சுமார் 2 அடி உயரத்தில் இருந்தது. எதிரிக்கும் ராஜன் சென்ற செண்பகராஜனும் இடையே எவ்வளவு நேரம் தகராறு நடந்தது என்றால் கால்மணிநேரம் நடந்தது. மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான்கு வழிச்சாலையில் அதிகமான வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். அந்த நான்குவழிச்சாலையில் தென்வடலாகவும், வடதென்னாகவும் ஒரு நிமிடத்திற்கு 100 வாகனம் போகும் என்றால் சரிதான். அப்படி வாகனங்கள் செல்லும்போது எதிர்திசையில் என்ன நடக்கிறது என்பது தெரியாது என்றால் சரிதான். நான் என் வீட்டிலிருந்து TN-57-DZ-1728 என்ற இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். என் அண்ணன் எந்த வாகனத்தில் சென்றார், அவருக்கும்

நான் சென்ற வாகனத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் முதலில் என் அண்ணன் சென்றுவிட்டார். 10 நிமிடம் கழித்துத்தான் நான் சென்றேன். அவ்வாறு 10 நிமிடம் கழித்து நான் போகும்போது என் அண்ணன் அங்கேதான் போகிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும், அண்ணனை பார்க்கவில்லை என்றும், போலீசார் சொல்லி இறந்த ராஜன் என்ற செண்பகராஜன் எவ்வாறு காயம்பட்டார் என்பதை தெரியாமல் போலீசார் சொல்லி பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் 2,3 கையெழுத்துக்கள் போட்டுக்கொடுத்தேன். சம்பவ இடத்திலிருந்து காயம்பட்ட நபரை எந்த வாகனத்தில் கொண்டு சென்றோம் என்றால் ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டுசென்றோம். அந்த ஆம்புலன்சின் டிரைவர் பெயரோ, வாகன எண்ணோ எனக்கு தெரியாது. அந்த ஆம்புலன்சிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் என் செல்லில் இருந்து போன் செய்தேன். அந்த செல்போனை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. செல்போன் எண்ணை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் கேட்கவில்லை, நான் சொல்லவில்லை. கொரணா காலத்தில் ரோடு மோசமாக இருந்ததால் ரோடு போட்டுக்கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அண்ணன் ரோட்டில் நடந்துபோகும்போது தடுமாறி இடதுபக்கம் விழுந்ததால் ஊசியான கல்குத்தி காயம் ஏற்பட்டதை மறைத்து போலீசார் சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தைத்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அண்ணன் காயம்பட்டு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டுசென்றபோது எனது இரத்தம்பட்ட துணிகளை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் என் துணிகளில் இரத்தம் படவில்லை. என் கைகளில் மட்டும் இரத்தம் பட்டிருந்தது. தகராறு நடந்து எவ்வளவு நேரம் கழித்து நான் என் அண்ணன் இறந்த

இடத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்றேன் என்றால் தகராறு முடிந்தவுடனேயே சென்றுவிட்டேன். தகவல் சொல்லி 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. அப்போது என்ன நேரம் இருக்கும் என்றால் இரவு 12, 1 மணியிருக்கும். திண்டுக்கல் மருத்துவமனையில் வைத்து என் அண்ணனை போலீசார் இரவு 2.30, 3 மணிக்கு விசாரித்தனர். அப்போது எனது அண்ணன் பேசும் நிலையில் இருந்தார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனைக்கு அன்றைய தினமே கொண்டுபோனோம். திண்டுக்கல்லில் இருந்து மதுரை மருத்துவமனைக்கு செல்லும்வரை என் அண்ணன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது என்னுடன் என் அண்ணன், என் சித்தப்பா ஆகியோர் இருந்தார்கள். என் சித்தப்பா விவசாயம் செய்கிறார். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் ராஜன் என்ற செண்பகராஜனுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் விபத்து நடந்ததை மறைத்து சாலையில் கீழே விழுந்து கூர்மையான கற்களால் காயம் ஏற்பட்டதை மறைத்து போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் முன்பகை எதுவும் இல்லை.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.03 17:33:32 +0530

Principal District Judge,
Dindigul.